1973 மார்ச் 9]

மணவிழா மண்டபங்கள்.

* 309. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வசதி படைத்த ஒவ்வொரு கோவில் தேவஸ்தானமும் குறைந்தது ஒரு திருமண மண்டபமாவது கட்ட வேண்டும் என்று அறநிலையத்துறை சுற்றறிக்கை ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தமிழகத்தில் அதிக வருவாயுடைய பழனி தேவஸ்தானத்திலிருந்து கல்யாண மண்டபங்கள் கட்டா விட்டாலும்கூட ஏழை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதிகளாவது கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோயிலின் அறங்காவலராக இருக்கிறார்கள். அவர்தான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம் : ஒவ்வொரு தேவஸ்தானமும் வசதி படைத்த அளவுக்கு பள்ளிக்கூடங்கள் நடத்த முயற்சிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வசதியான கோயில்களிலிருந்து பள்ளிக்கூடங்கள் நடத்துவதாக இருந்தாலும், பொது மக்கள் நன்மைக்கான காரியங்களைச் செய்வதாக இருந்தாலும் அரசாங்கம் அதிலே தலையிடாது. அதை அந்தந்தக் கோயில்களில் இருக்கும் அறங்காவலர்கள் முடிவு செய்தால் அரசு அது பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : ஆணை பிறப்பிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆணை பிறப்பிக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில்களின் நிர்வாகத்தில் தலையிட்டு அரசு ஆணை பிறப்பிக்கத் தயாராக இல்லை.